29.09.2023

அசல் வழக்கு எண்: 486/2013

பி.வா.சா.1 சாட்சி பராமேஸ்வரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் வாதி 10 அடி பாதை கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 10 அடி பாதை என்பது திருமங்கலம் புல எண். 153 ல் கண்ட கிழமேல் பாதையான 200 அடி நீளம் மற்றும் 10 அகலம் கொண்ட பட்டுநூல்காரன் பேட்டை தெரு என்றால் சரியல்ல. 10 அடி பாதையில் வடபுறம் எனது வீடு உள்ளது என்றால் வடபுறம் எனது வீடு உள்ளது. ஆனால் 10 அடி பாதை என்பது தவறாகும்.

1989ம் ஆண்டு நகர திட்ட அளவையின் போது பாதையாக வரைபடுத்தி நகர புல வரைபடத்தில் திருத்தம் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். 153ல் கண்ட பொது பாதை என்பது நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாதை என்றால் சரியல்ல.